தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாகத் தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டம்-ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம்-விராலிமலை, விருதுநகர் மாவட்டம்-சாத்தூர், பெரம்பலூர் மாவட்டம்-ஆலத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்-திண்டிவனம் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய ஐந்து இடங்களில் 1,000 மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறும்வகையில், விடுதியுடன்கூடிய புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசின் இந்த நடவடிக்கைகள்மூலம் வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படுவது மட்டுமல்லாமல், தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

3. வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம்மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுதல், பழுதுபார்த்தல், மதுரையில் குடிசைப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டுதல், சென்னையில் மத்திய சதுக்கம் மற்றும் சரக்குந்து வாகன நிறுத்துமிடம் அமைத்தல், சூரிய மின் சக்தி அமைப்புகள் நிறுவ விதித் திருத்தம் மற்றும் ஐந்து தொழிற்பயிற்சி மையங்கள் தொடங்குதல் — முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே திராவிட ஆட்சியைத் தொடங்கி வைத்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள். அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று சொன்னார்கள். அண்ணாவின்*

ஆட்சியைத் தொடர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்று சொன்னார்கள். அந்த ஆட்சியைத் தொடர்ந்து, சற்றேறக்குறைய, அரை நூற்றாண்டுக் காலமாக இருக்கும் திராவிட ஆட்சியை, நூற்றாண்டு காலத்திற்கும் கொண்டு செல்லப்போகிற, போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 'ஏதிலார்க்கு யாதுமாய் நிற்கிற', அப்படிப்பட்ட கொள்கை அறிவிப்புகளை இன்றைக்கு இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு தனி மனிதனின் அவசிய, அத்தியாவசியமான, அடிப்படைத் தேவை, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம். உண்ண உணவு என்று சொன்னால், தமிழகத்திலே தனி ஒருவன் பசியோடு இருக்கிறான் என்று சொல்லமுடியாத அளவிற்கு, பசியோடு இருப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு பசி என்கின்ற அந்தத் துக்கத்தை அம்மா உணவகத்தின் மூலமும், விலையில்லா அரிசி வழங்குவதன் மூலமும் அதற்கு மேலே சத்துணவுத் திட்டத்தின் மூலமும் ஒழித்திருக்கின்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

உடுக்க உடை என்றால், பொங்கலுக்கோ, தீபாவளிக்கோ கட்டுவதற்கு ஆடையில்லை; கட்டிய ஆடையிலும் நெய்த நூலைவிட தைத்த நூல் அதிகம் என்றிருந்த காலமெல்லாம் மாறி, இன்றைக்கு அவர்களுக்கு ஆடை தந்திருக்கிறார்கள். மூன்றாவது இலட்சியமான, இருக்கும் இடத்திற்கான தேவையை நிவர்த்தி செய்வதில் தமிழகம் முன்னணியில் வந்துகொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பறைசாற்றுவதைப்போல இன்றைய அறிவிப்புகள் இருக்கின்றன. இந்த அறிவிப்புகள் ஏழையெளிய மக்களுடைய வயிற்றில் பால் வார்த்ததுபோன்று இருக்கின்றன. 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலின்போது, போற்றுதலுக்குரிய பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள், தேர்தல் பிரகடனத்தை வெளியிட்டபோது, "குடிசைகளற்ற இந்தியாவை உருவாக்குதே எனது உயரிய நோக்கம்" என்று கூறினார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிசைகளற்ற தமிழகத்தை உருவாக்குவதற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்திற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை அள்ளித் தந்திருக்கிறார்கள்; (மேசையைத்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2015 செப்டம்பர் 15

தட்டும் ஒலி) தக்க வசதியோடு, சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில், அந்த இல்லங்கள் அமைய வேண்டும் என்கிற சித்தாந்தத்திற்கேற்ப, 12,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் கட்டப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இன்றைக்கு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, தொழில் பழகுநர்களை உருவாக்குவதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே, 15 தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்துத் தந்தார்கள்; தற்போது 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 4 ஆண்டுகளில் 20 தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்து, ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கி, பயிலும் வகையில் திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இதை நான் பாராட்டி, நன்றி கூறுகிறேன். நன்றி கூறுகிற உணர்வுகூட, தமிழக மக்களுக்கு இல்லை; தமிழக மக்களின் பிரதிநிதிகளுக்கு இல்லை என்று சொன்னால், வரலாறு மன்னிக்காது. வாழ்த்துகிறேன், நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “குடிசைகளே இல்லாத நாடாக அன்னைத் தாய்த் தமிழ் மண்ணை உருவாக்குவோம்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே பல திட்டங்களைத் தந்துள்ளார்கள். குடிசைகளில் வாழ்கிற ஏழையெளிய, உழைக்கின்ற மக்களுடைய நலன்களைக் காப்பதில், வரலாற்றில் வேறு எந்த அரசும் செய்திடாத சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டம் கூட்டமாய், கடுமையான நெருக்கடியில் வசிக்கிற ஏழை மக்களுடைய துன்பத்தை, துயரத்தை, கண்ணீரைத் துடைத்திட, சென்னை மாநகரம் உள்ளிட்ட பெருநகரங்களில் வசிக்கக்கூடிய மக்களுக்குக்கூட பன்னடுக்கு மாடிக் கட்டடங்களைப் புதிதாக அமைத்திட இன்று திட்டம் தந்திருக்கிறார்கள். அதேபோன்று, மதுரை போன்ற பல்வேறு மாநகரங்களில் இருக்கின்ற மக்களுக்கும், ஆட்சேபணைக்குரிய இடங்களில் குடியிருக்கும் மக்களுக்கும் புதிய இடங்களைத் தந்து,

2015 செப்டம்பர் 15] [திரு. உ. தனியரசு]

அவர்கள் மத்திய, மாநில அரசுகளுடைய வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பயன்படுத்தி, புதிதாக, தரமான வீடுகளைக் கட்டி வாழ்வதற்கான புதிய திட்டத்தையும் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆள்கின்ற தமிழ்நாடுதான், இந்தியாவிலேயே குடிசைகள் இல்லாத ஒரே மாநிலம் என்பதை உறுதிப்படுத்துவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களுக்கு கேள்விக்குறியாக இருக்கக்கூடிய தங்குவதற்கு இடமில்லை என்ற பிரச்சினையை மாற்றியிருக்கிறார் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஏற்கெனவே வேலைக்காக காத்திருக்கிற இளைஞர்களோடு, இன்னும் புதிதாக வரும் மாணவச் செல்வங்களுக்காக இன்னும் வலிமையாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தினார்கள். ஏற்கெனவே அம்மா அவர்கள் 15 தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இன்று மேலும், 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல, அம்மாணவர்கள் அங்கேயே தங்கிப் பயில்வதற்கு வசதியாக, அவர்களுக்கு உணவையும் தந்து, இருப்பிடத்தையும் தந்து, பயிற்சியும் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சி முடிந்த பிறகு வேலைவாய்ப்பையும் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வேலைவாய்ப்பு கிடைத்த பிறகு, அவர்களுக்கு குடியிருக்க வீட்டையும் தருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு மனிதன் குழந்தையாகப் பிறந்தது முதல் அவன் மரணித்துப் போகிற வரை, அவனுக்குத் தேவையான அனைத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) அணு அணுவாய், பார்த்துப் பார்த்துச் செய்கிறார்கள். தாய்த் தமிழ் மண்ணில் பிறந்தால், உற்றார்களும், உறவினர்களும், ஈன்ற தாயும்கூட கைவிட்டாலும், அரசு கைவிடாது என்கின்ற நிலை உலகத்தில் வேறு எந்த ஆட்சியிலும், எந்த நிருவாகத்திலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கான ஆட்சியை, மறுமலர்ச்சிக்கான நிருவாகத்தைச் செய்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றில் ஒரு சமூக விஞ்ஞானியாக, ஓர் அரசியல் விஞ்ஞானியாக, மானுட குலம் செழிக்க, கண்ணீர், துன்பம் இல்லாத, ஈவும், இரக்கமும், கருணையும் உள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மானுட சமூகத்தைப்

படைத்திட, கருணையின் வடிவமாய், நீதியின் வடிவமாய் இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏற்கெனவே உணவைத் தந்து பசியைப் போக்கினார்கள், உடையைத் தந்து மானத்தைக் காத்தார்கள், இப்போது இருப்பிடத்தைத் தந்து வாழுகிற நம்பிக்கையையும் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியினுடைய வரலாறு உலகம் உள்ள வரை தொடரும், தொடரும், தொடரும். இன்றைக்கு நல்ல பல திட்டங்களை அறிவிப்பு செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும், மீண்டும் என் பணிவான நன்றியைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

முற்பகல் 11-35

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் 10 அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். தமிழக மக்களுடைய அடிப்படைத் தேவை, குடியிருப்பதற்கான வீடு. அந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், சென்னை, அம்பத்தூர் பகுதியில் 2,300 வீடுகள், ரூ.380 கோடி செலவில் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, குறைந்த வருவாய்ப் பிரிவினர் வாங்கக்கூடிய வகையில் அவற்றை 20 இலட்சம் ரூபாய்க்கும் குறைவான விலையில் கொடுப்பதாக ஓர் அறிவிப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

அரசு ஊழியர்களுக்கு சொந்த வீடு வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அரசு அலுவலர்களுக்குச் சொந்த வீடு கட்டும் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தார்கள். அந்தத் திட்டத்தின்கீழ், கிட்டத்தட்ட 500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்ட தற்போது 225 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே இவையெல்லாம் பாராட்டக்கூடியது. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவு மக்கள் பயன்படுத்துகின்றவகையிலே, 2,800 குடியிருப்புகள் சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் கட்டப்படும் என்று

2015 செப்டம்பர் 15] [திரு. பி.வி. கதிரவன்]

அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மதுரையில் தோப்பூர் உச்சப்பட்டி பகுதியில், ஒரு துணை நகரம் அமைக்கப்படுமென்று அறிவித்திருந்தார்கள். அதனை மேம்படுத்தும்போது, 4,500 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான அலகுகளாக குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும், அந்த வீடுகள் ஆட்சேபகரமான புறம்போக்குகளில் வசிக்கும் குடிசைப் பகுதியினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்ததன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கெல்லாம், வீடுகள் கட்டிக் கொடுத்து, அதாவது மதுரை மாவட்டத்தில் குடிசை வீடுகளே இருக்கக் கூடாது என்ற நல்ல நிலைக்கு மாற்ற வேண்டும் என்று செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வகையில், 400 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிகள் கட்டிக் கொடுத்து, அதில் கார்கள் மற்றும் இதர போக்குவரத்து வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்பாட்டைச் செய்திருக்கின்றார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் திறன் மேம்பாட்டிற்காக, 1,000 மாணவர்கள் தங்கி தொழிற்பயிற்சிபெறும் வகையில் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 5 புதிய I.T.I. துவங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

தமிழகத்தை மேம்பட்ட மாநிலமாக, இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகக் கொண்டுவர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக, கீழ்த்தட்டு மக்களும் பயன்படுத்துகின்றவகையில் இந்தத் திட்டங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இவற்றை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமாரப் பாராட்டி, வரவேற்கிறது. நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டமைப்புகளில் இரண்டு விதம் உண்டு. Hard Infrastructure மற்றும் Social Infrastructure. இந்த இரண்டு

கட்டமைப்புகளிலும், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,746 கோடி ரூபாய்க்கு அறிவித்திருக்கின்ற திட்டங்களை உளமாற வரவேற்கிறேன். குறிப்பாக, இன்றைக்கு, London, Paris, New York போன்று எந்த இடங்களுக்குச் சென்றாலும், அந்த நகருக்கு உருத் தருவது, நகருக்கு உன்னதம் தருவது, அங்கிருக்கும் ஒரு Square. அதுபோன்ற ஒரு சதுக்கத்தை, Central Square ஆக, இனிவரும் காலத்தில் சென்னைக்கு வந்தால், Central Square—க்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகிற அளவிற்கு, 400 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்தில் மத்திய சதுக்கத்தை ஏற்படுத்தும் திட்டம், உன்னதமான திட்டம். அதேபோல், Container Terminal. North Madras என்றாலே நெரிசல்தான். அதை நீக்குவதற்காக ரூ.100 கோடி செலவில் Container Terminal உருவாக்கப்படுமென்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி.

எல்லாவற்றிற்கும் மேல், மனித வள மேம்பாட்டுத் துறையில், தமிழகம் முதல் இடத்தில் இருக்கிறது. அந்த முதல் இடத்தைத் தக்க வைப்பதற்காக, மேலும் 5 I.T.Is-ஐ அமைத்து, தமிழ்நாட்டில் இந்த 5 வருடங்களில் மொத்தம் 20 I.T.Is-ஐ உருவாக்கியிருக்கிறார்கள். மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளின் கணக்கெடுப்பு 2015-ல் எடுக்கப்படவிருக்கிறது. அதில் கண்டிப்பாக தமிழகம் முதலிடத்தில் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான், மக்களைத் தேடி அரசு, அரசை நாடி மக்கள் அல்ல என்று எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி. இதுதான் எனது இலட்சியம் என்று, Vision 2023, 'தொலைநோக்குத் திட்டம்- 2023'-க்கு வலுசேர்க்கும் விதத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கூட்டி, இலட்சியம் ஓர் இலட்சம் கோடி, நிச்சயம் ரூ.2,42,160 கோடி என்று (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் முதலீடுகளை ஈர்த்து, சரித்திரம் படைத்த எங்கள் வரலாற்றுத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 15] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

முற்பகல் 11-40

வாழ்கிற மக்களுக்கு இருக்க இடம் இன்றியமையாதது. ஒரு நல்ல அரசினுடைய கடமையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நல்ல கல்வி, நல்ல சுகாதாரம் இந்த ஐந்தையும் கொடுத்து புரட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சென்னை மற்றும் பிற பகுதிகளில் ரூ.2,280 கோடி செலவில் குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர், உயர் வருவாய்ப் பிரிவினர் மற்றும் அரசு ஊழியர்கள் என அனைவரும் பயன்பெறுகிற வகையில், 5,600 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு 'Housing for all', 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ், ரூ.457.50 கோடி செலவில் 12,500 குடியிருப்புகள் கட்ட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைப் பழுதுநீக்கம் செய்ய ரூ.10 கோடி நிதி ஒதுக்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரைக்கு அருகில் உள்ள தோப்பூர்-உச்சப்பட்டி பகுதியில் துணை நகரம் அமைக்கப்படுகின்ற திட்டத்தின்கீழ் economically weaker sections, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கிய மனைகளை, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுத்து, மதுரையில் குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் தரமான வீட்டில் வசிப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதி மற்றும் மெட்ரோ இரயில் கழகத்தின் நிதி ஆகியவற்றின்மூலம் ரூ.400 கோடி செலவில், உலகத் தரம் வாய்ந்த 'மத்திய சதுக்கம்' கட்ட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கூட்டு முயற்சியில் எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் உள்ள எர்ணாவூரில் ரூ.100 கோடி செலவில், 29 ஏக்கரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய சரக்குந்து வாகனம் நிறுத்துமிடம் கட்ட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, ஒரத்தநாடு பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். 'முடியட்டும், முடங்கிப் போனவர்களின் முனகல் சத்தம்', (மேசையைத் தட்டும் ஒலி) '2016-ல் மலரட்டும் அம்மா அவர்களின் ஆட்சி', 'தொடரட்டும் அம்மா அவர்களின் சாதனைகள் நூறாண்டு, நூறாண்டு' என்று கூறி, அம்மா அவர்களை வணங்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுத் திட்டங்களால் ஆச்சரியங்களை பூச்சொரிய வைத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் சட்டமன்றப் பேரவை, ஒப்பில்லா வாகைகளால் உச்சங்களைத் தொட்ட சபையாக மாறியது இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) 5 இடங்களில் 1,000 மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறும் வகையில், விடுதியுடன்கூடிய புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 45 கோடியே 97 இலட்சம் ரூபாயில் துவக்கிட ஆணையிட்டு, தொழிற்பயிற்சியை உலகத் தரத்திற்கு உயர்த்தும் உன்னத முயற்சிக்கு வழிவகுத்த மாண்புமிகு அம்மா அவர்களை வாயார வாழ்த்துகிறது தமிழகம் இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) பக்கத்து மாநிலத்தைக்கூட பார்த்திராத மாணவர்கள், இன்று உள்ளங்கைகளில் உலகையே பார்க்கிறார்கள். பக்கத்து மாநிலத்தைக்கூட பார்க்க முடியாத மாணவர்கள், இன்றைக்கு சிறப்போடு இந்தப் பணிகளையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், சரஸ்வதிகூட வீணைக்குப் பதில், இன்றைக்குக் கணினியைக் கையில் ஏந்தி நிற்கிறாள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா! தங்களுக்கு எனது சார்பாகவும், துறை சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தங்கள் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 செப்டம்பர் 15]

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காஞ்சி மாநகர் கண்ட, கன்னித் தமிழுக்குத் தன்னைத் தந்த தலைவன்; மாதரசி நம் தாய்க்கு மாநிலங்களவையில் தான் அமர்ந்த இருக்கையை ஆசி தந்து அளித்த அறிஞன்; (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இன்று பிறந்த நாள்.

மாச்சர்யம் மிகுந்திருக்கும் இந்த மண்ணிலே மனிதாபிமானம் மிக்க மாண்புமிகு அம்மா அவர்கள், வங்கக் கடலோரம் துயிலும் புரட்சித் தலைவரால் அடையாளம் காட்டப்பட்டு, சிரித்த முகம் காட்டி, தன்னைச் சார்ந்தோர்க்கு நல்வழி காட்டி, கருத்து நிறைந்த முகத்தினிலே கனிந்த அருள், அரியதாய், பெரியதாய், வணக்கத்திற்குரியதாய் (மேசையைத் தட்டும் ஒலி) எளியதாய், இனியதாய், எங்குமே நிறைந்ததாய், (மேசையைத் தட்டும் ஒலி) மலர்வதாய், கனிவதாய், மனதிலே நிறைந்ததாய், வளர்வதாய், மாணவர்களை உயிர்விக்க உதித்ததாய், எங்கள் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நலத் துறையில் அருமையான அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

குருவிக்குகூட ஒரு கூடு இருக்கிறது. ஆனால், குடியிருப்பதற்கு வீடுகூட இல்லாமல் அல்லல்படுபவர்களின் துயர் நீக்க அன்னையின் அன்பான அறிவிப்புகள். புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திரைப்படத்திலே 'ஆளுக்கொரு வீடு கட்டுவோம்; அதில் ஆயகலைகளை சீராகப் பயில்வோம், என்று பாடினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனையொட்டி தமிழகத்திலே ஆளுக்கொரு வீடு அளிக்க அன்னமிடும் அன்னையின் ஆதரவான அறிவிப்புகள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ள சூளுரையில், 'தமிழக மக்களுக்காக என்னையே அர்ப்பணித்து வாழ்கின்ற பெரும் பாக்கியத்தை, இறைவன் எனக்கு அருளியிருக்கிறார்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லியிருக்கிறார்கள். 'பிறருக்காக வாழும் நெஞ்சம்; அது கடவுள் வாழும் மஞ்சம்' என்பர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! மாண்புமிகு அம்மா அவர்களின் நெஞ்சத்திலே இறைவன் என்றைக்கும் குடிகொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் வாழ, தமிழர்கள் உயர என்றென்றும் அருள்புரிவார் என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மிகச்

சிறந்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ள தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த. . . (குறுக்கீடுகள்)*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *ஈராயிரம் ஆண்டுகள் அன்னைத் தமிழகம் தவமிருந்து பெற்றெடுத்த தலைமகன்; சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக்கவி நடையும், தன்னுடைய உரைநடையால் கண்ட கோமான்! தம்பிமார் படைமீது விழியொற்றி வெற்றிகண்ட பூமான்! பூமிப் பந்தில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ, அங்கெல்லாம், அவர்தம் இதயமெல்லாம் சிங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் இதய மன்னன்! வங்கக் கடலோரத்தில் ஆறடிச் சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமலும் உறங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளில் நான் என்னுடைய வாழ்த்துகளை, என்னுடைய நன்றியை, என்னுடைய வணக்கத்தை, அந்தக் கல்லறையை நோக்கிச் செலுத்துகிறேன்.*